No.5. Kavignar Puduvai Sivam St
Venkata Nagar Extension
Pondicherry 605 011 INDIA
Ph: (413) 2213758, 2212443, 2211592, 2210514
Fax: (413) 2212338
e-mail:motherssindia@gmail.com
msspondyoffice@gmail.com

# The Mother's Service Society

26 / 12 / 2011

## சாதாரண வாழ்க்கையும் அன்னைமயமான வாழ்க்கையும் வேறுபட்டு நிற்குமிடங்கள்

வாழ்வு என மனிதன் நினைக்கும் பொழுது, ஊர் உலகில் நிலவும் வாழ்வு எனப் பொருள். மனிதன் ஓர் அம்சத்தில் மற்ற அனைவரையும்விட உயர்ந்தவன். ஒருவனுக்கு பாட்டு வரும், அடுத்தவன் உலகை அறிவான். மேதாவிலாசமில்லாத மனிதனே உலகிலில்லை. உலகம் மாறும் நேரம், அடிமட்டத்திலுள்ளவன் மேல்மட்டத்தை அடையும் நேரம். உலகம் மாறும் நேரம் இன்றுள்ள அத்தனை தடைகளும் தகர்த்தெறியப்படும் நேரம். எந்த தடையுமில்லாத நேரம் இயல்பாக எவரிடமும் உள்ள மேதா விலாசம் எழுந்து செயல்படும். சாதாரண நேரத்தில் மனிதன் ஊருக்கு அடங்கி வாழ்கிறான். நடைமுறையில் அவன் தன் குறைந்தபட்ச திறமையை வெளிப்படுத்துகிறான். அது அவன் ஊரை ஏற்கும் நேரம். அவனுக்கில்லாத பிரச்சினைகளை அவன் ஏற்க வேண்டி வரும். சாதாரண வாழ்வில் மனிதன் தான் முன்னேறுவதைப் புறக்கணித்து ஊர் முன்னேற்றத்திற்காக வாழ்கிறான். வாய்ப்புகள் கண்ணில்படுவதில்லை. பிரச்சினைகள் பல தென்படும். அறிவால் செயல்பட முடியாது. அறிவுக்குப் புலப்பட்டதை அனுபவிக்க முடியாது. உணர்வால் செயல்பட வேண்டும். நாம் பின்பற்றும் முறைகள் பழக்கங்கள், நெடுநாளைய உடல் ஏற்ற பழக்கங்கள், உணர்வு மதித்தவை. அறிவு அறிவதை உணர்வு ஏற்காது, உடல் எதிர்க்கும். இது மூட நம்பிக்கை இலட்சியமாக ஏற்று வழிபடும் வாழ்வு.

### அறியாதவனுடைய அறியாமையை அற்புதமான இலட்சியமாக நினைப்பது.

ரீகன் *8* ஆண்டு ஜனாதிபதியாக இருந்த நேரம். அறிவுக்குப் புறம்பான செயல்பாடுகளை அமுல்படுத்தினார். செலவை அதிகப்படுத்தி மிச்சத்தை வளர்ப்பேன் என்று உறுதி பூண்டார். Washington Post அவர் கூறும் அபத்தங்களை வெளியிட்டது. அதை வெளியிட்டபின் ரீகனுடைய பிரபலம் பல மடங்கு உயர்ந்தது. எவ்வளவு அபத்தமாக அவர் பேசினாலும் அமெரிக்க மக்கள் அவரை மேலும் மேலும் பாராட்டினர். இது புரியாத புதிர் என்று Washington Post கூறியது. மக்களாட்சி பெரும்பான்மையாட்சி. பெரும்பான்மையோர் அறிவற்றவர். படிப்பு வேறு அறிவு வேறு. மடமை மகிமை பெறுவது மக்களாட்சியின் மகிமை.

சாதாரண வாழ்வில் உள்ள மனிதன் பிறர் செய்வதைக் கண்டு தானும் முன்னேற மாட்டான். உலகத்தில் விவசாயம் உச்சகட்டத்திற்கு உயர்ந்து விட்டது. *100* ஏக்கரை ஒரு குடும்பம் நிர்வாகம் செய்தது. *500* ஏக்கரை Ph.D. படித்தவர் ஒருவரே நிர்வாகம் செய்கிறார். நாம் *10* ஏக்கர் பயிரிட *50* பேரை நாடுகிறோம். விவசாயம் எளிமையானது. விஞ்ஞானம் உயர்ந்தது. கல்வி அனைவருக்கும் உரியது. நாம் மேலை நாடுகளைப் பின்பற்றுவதில்லை. அவற்றால் பயனடைவதில்லை. ஜப்பான் அதைச் செய்து வல்லரசாகி அமெரிக்காவிற்கு அடுத்த செல்வம் பெற்ற நாடாகி, போரில் இறங்கி தன்னை அழித்துக் கொண்டது. நம்மைப்போல் மக்கட்தொகை பெருகிய சைனா நம்மைப்போல் இருமடங்கு முன்னேறுகிறது. நமக்கு பிறரைக் கண்டு பயன்பெறும் திறனில்லை. பொறாமை, போட்டி மிதமிஞ்சியுள்ளது. *1950, 1960*-இல் இருந்த மனநிலை சற்று மாறி படிப்பு, விவசாயம், வியாபாரத்தில் தெரிகிறது. *1980* முதல் நாடு செழித்துவிட்டதாகக் காணப்படுகிறது. காலம் எதுவானாலும், அன்பருக்கு மற்றவரைவிட அதிக உயர்வுண்டு.

- இன்று பலரும் பெறுவதை அன்பர் 1950-இல் பெற்றார்.
- 2100 AD-இல் அனைவரும் பெறப் போவது அன்பருக்கு இன்றுண்டு.
- அன்பர் அனைவரிலிருந்தும், மாறுபட்டிருக்க வேண்டும்.
- பழைய மனநிலை, பழைய பழக்கங்கள், நம்பிக்கைகளை கைவிட்டு அன்னைக்குரிய மனநிலை, பழக்கங்கள், நம்பிக்கைகளை ஏற்பது அன்பருக்கு நல்லது எனக் கூறும் சொற்பொழிவு இது.
- எந்த காலத்திலும் முன்னோடியைக் கடந்த முதன்மையான நிலையை இயல்பாகப் பெற்றவர் அன்பர்.

பொதுவாக பிரார்த்தனை பலிக்கும், தவறும். அன்பர்கட்கு ஓரிரண்டு தவற எல்லாப் பிரார்த்தனைகளும் பலிக்கும். பலிக்காத பிரார்த்தனைக்கு மாறான சுபாவம் தடையாக இருக்கும். சுபாவத்தை மாற்றிக் கொண்டால், பலிக்காத பிரார்த்தனையும் பலிக்கும்.

எல்லாப் பிரார்த்தனைகளும் தவறாது பலிப்பவருக்கு
அன்னை வாழ்வுண்டு.

அன்பரானவுடன் வாழ்வு உயர ஆரம்பிக்கும். தொழிலில் முதன்மை பெறுவார். உறவில் சிறப்படைவார். நண்பர்களைக் கடந்து செல்வார். வாழ்வு ஊரில் பெற்ற வளத்தின் உச்சியை ஓரிடத்திலாவது கடந்து வருவார். ஜீனியர் வக்கீல் அன்பரானால், ஊரில் பெரிய வக்கீலுக்கு மட்டும் போகும் வழக்கு அவரைத் தேடிவரும். பழைய பழக்கங்களைக் கைவிட்டால் கேஸ் ஜெயிக்கும். மனிதன் தன் குறைந்தபட்ச திறமையால் செயல்படுகிறான் என்று ஆரம்பித்தேன். அன்னை அன்பரை நெருங்கியவுடன் அதிகபட்ச திறமை, பக்குவத்துடன் செயல்பட வேண்டும் என்றேன்.

அதிக பட்சம் என்பது நம் திறமையல்ல.
அதிகபட்சம் அகந்தை விலகுவது.

புதுமனநிலை அன்னை மனநிலை. அது வெளியிலிருந்து வரும் சந்தர்ப்பமாக--கடிதம், சொல்--வரும். அடுத்த கட்டத்தில் அது உள்ளே உதிக்கும் உயர்ந்த எண்ணமாக எழும். நம் அகந்தையின் முனைப்பு வேகமுடையதாக இருக்கும். நான் கூறும் அன்னை எண்ணம் இதமான இனிமை மென்மையுள்ள வலிமையுடன் எழுவது தெரியும். அவற்றைப் பின்பற்றுவது அதிகபட்சமாக இருக்க வேண்டும். நமக்கு இரகஸ்யம் பழக்கம். புதிய நிலைமைக்கு இரகஸ்யம் உதவாது. எந்த செய்தி அனைவரும் அறிவது நல்லதோ, அதை நேரமறிந்து தடையின்றி, பொங்கி எழும் உற்சாகமாக வெளிப்பட்டுக் கொண்டிருப்பது பொருத்தம். அன்பர் சிக்கனமானவரானால், அன்னையிடம் வந்தபின் பெரும் வருமானம் வர ஆரம்பிக்கும். அது தெரிய, பெருக, பழைய சிக்கனம் மாறி, தாராளமாகச் செலவு செய்ய ஆரம்பிக்க வேண்டும். அது முடியாத நிலையில் சிக்கனம் அனுமதிக்கும் அளவுக்கு செல்வம் பெருகும். அன்னை தரிசனம் விழைந்த வீர சைவர் தம் குறுகிய மனப்பான்மையால் "காணிக்கை வேண்டாம், ஆசீர்வாதம் போதும்" என்றார். ஆசீர்வாதம் சேவைக்குரியது. காணிக்கை செல்வத்திற்குரியது. குறுகிய மனப்பான்மை குதர்க்கமாயிற்று. வாழ்வுக்குக் குதர்க்கம் உண்டு. வாழ்வு அவரைக் கேலி செய்ய விரும்பியது போலும். சேவை 30 மடங்கு பெருகியது. செல்வம் பெருகவில்லை. குதர்க்கவாதி நம்மவர். அவர் வாழ்வையும், அன்னையையும் புரிந்து கொண்டு குதர்க்கத்தைக் கைவிட்டு காணிக்கை கொடுத்து பெரும் செல்வம் பெற்றார். அமெரிக்க வால்டருக்கு அதுவும் புரியவில்லை. பத்து டாலர் கொடுக்க மறந்து 8 கோடி பலனை இழந்தார்.

நாமறிந்த உலக வாழ்வு நம் சுபாவத்திற்கேற்ற பலன்தரும். சுபாவம் மலர்ந்து சுபீட்சம் வருவது பர்சனாலிட்டியால். அதன் அடுத்த நிலை பர்சனாலிட்டியின் சுபாவம். பக்தவச்சலம் வாழ்வின் சுபாவம் தரும் பலனைப் பெற்றார். முதல்வரானார். சுப்ரமணியம் பச்சனாலிட்டியால் டெல்லி சென்று பசுமைப் புரட்சிக்கு வித்திட்டார். மகாத்மா காந்தி பெற்றது பர்சனாலிட்டிக்கு அடுத்தகட்ட பர்சனாலிட்டியின் சுபாவம். அன்னை அன்பருக்கு அதுவும் உண்டு. அவர் பழையதைக் கைவிட்டு, புதியதை மேற்கொள்வதைப் பொருத்தது. நாட்டின் தலைமை பாங்கில் 13-ஆம் நிலையில் உள்ள அன்பர் அதுபோன்ற பலன் பெற்று 13 பேரைக் கடந்து சேர்மனானார்.

அப்பதவி எவருக்கும் 12 மாதம் தரப்படுவதில்லை. இவருக்கு 7 ஆண்டு கிடைத்தது. நான் அன்பர்கள் பெற்ற பலனைக் குறிப்பிட்டு எழுதுகிறேன்.

- பலன் முக்கியமில்லை.
- பெறும் பக்குவம் முக்கியம் என்பது அன்னை சட்டம்.

அதுபோன்ற அன்பர் உலகம் அறியாத முறையில் அன்னைக்கு உலகில் சேவை செய்தார். உலகத் தலைவர்கள், வல்லரசுகள் செய்ய மறுத்தது அவர் சமர்ப்பணத்தால் அன்னையின் இலட்சியமாக நிறைவேறியது.

- உலகம் பெறும் பலன், உள்ளத்தால் அன்னை பெறும் பலன்.
- அன்பர் வாழ்வில் வளர்பவர்.
- வாழ்வைக் கடந்து அன்னையில் வளரும் அன்பருக்குரியது ஆன்ம நலன்.

அன்னையை தரிசித்தவர், அவருடனேயே இருக்க விரும்பி அதன்படி செயல்படுவது உண்டு. அதுபோல் செயல்பட்டவர் தம் சொத்து முழுவதையும் அன்னைக்கு அர்ப்பணம் செய்தவரும் உண்டு. அந்த வாய்ப்பு ஆன்மீக வாய்ப்பு, அனைவரும் பெறுவதில்லை. அது வந்தபின், தம் மூலம் மற்ற அன்பர் தம் சொத்தை சேவைக்கு அர்ப்பணம் செய்வதைக் காண்பார். தன்மூலம் அன்பர்கள் முழு சொத்தையும் அன்னைக்குத் தருவதைக் கண்டும் தன் நிலைமையை மாற்றிக் கொள்ளாத அன்பர் பரிதாபத்திற்குரியவர். அவரைப்போன்ற துர்அதிர்ஷ்டசாலியில்லை. அதுபோல் கண்மூடியாக இருப்பவர் ஆன்மீக வாய்ப்பை இழப்பதுடன், வாழ்க்கை வாய்ப்பையும் இழப்பார்.

- அரிது அரிது அன்பராவது அரிது.
- அதனினும் அரிது ஆன்மீக வாய்ப்புப் பெறுவது.

வாழ்வு 1950 வரை சுயநலமாக இருந்தது. அதன்பின் மாற ஆரம்பித்துள்ளது. இன்று திறமையுள்ள மாணவர்கள் அனைவருக்கும் படிக்கும் வசதியுண்டு. அன்று அது இல்லை. அன்று திறமையிருந்தால் அவர் உள்ள இடத்தில் அதிகாரமுள்ளவர்க்கு திறமையாக ஊழியம் செய்யலாம். அம்பாணி முதல் சரவணபவா வரை இன்று திறமை பலன் பெறுகிறது. 100 ஆண்டுகட்டுமுன் கவிஞர், புலவர், கலைஞர், பணக்காரர்களை நாடி வாழ்ந்தவர். இன்று உலகம் முன்னேறியதால் அவர்கள் திறமை மார்க்கெட்டில் பலன் பெருவாரியாகப் பெருகிற்று. ஒரு சிலர் நிமிஷத்திற்கு ரூ. 10,000 சம்பாதிப்பதாகச் செய்திக் கூறுகிறது.

அன்று எந்த பெரிய வேலை வந்தாலும் உள்ளூர் வேலைக்கே மரியாதை. ஊரைவிட்டுப் போவதில்லை. மாநிலத்தை விட்டுப் போக மறுத்தவர்களில் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் ஒருவர். இன்று லட்சக்கணக்காக அமெரிக்கா செல்கின்றனர். வாழ்வு சுயநலத்தைக் குறைத்ததுபோல், வளரும் அளவை உலகெங்கும் வியாபிக்கச் செய்துள்ளது.

- அன்று அதிகபட்ச சம்பளம் ஜனாதிபதிக்கு ரூ. 10,000.
- இன்று குறைந்தபட்சக் கூலி மாதம் ரூ. 10,000 ஆகிறது.

"நான் யார் தெரியுமா?" என்பது அன்று நக்கீரன் முதல் பெருமாள்வரை அனைவரும் கொண்ட கொள்கை. இன்று உலக முழுவதும் அப்படிப் பேசுவது, நினைப்பது அநாகரீகம் என்று கருதுகிறது.

- அன்று நடந்தது சுயநல சாதனை.
- இன்று நடப்பது தன்னலமற்ற சேவை.

சுயநலம், சிறிய புத்தி, அல்பம், கோள் சொல்வது, ஒட்டுக் கேட்பது, இலஞ்சம் வாங்குவது, பிடியை விடாமல் கிராக்கிச் செய்வது, பழைய மனப்பான்மை. பரநலம், பெருந்தன்மை, விசால மனப்பான்மை, பிறர் விஷயத்தை அறிய மறுப்பது, தூய்மையான சேவை, பிடியை விட்டுக் கொடுப்பது அன்னை வாழ்வுக்குரிய முறைகள். திருமணம், பேரம், வேலை பெறுவது, அட்மிஷன், எலக்ஷன் ஆகியவற்றில் அன்பரானாலும் பெரும்பாலும் நடைமுறையில் அவரும் பிறர்போல நடக்கப் பிரியப்படுவதுண்டு. ஒட்டுக்குப் பணம் தராமல், வரதட்சணை கேட்காமல், பேரம் பேசாமலிருப்பது, அட்மிஷனுக்கு சிபாரிசு தேடாதது ஆகியவை அன்னைக்குரியவை. இவற்றைச் செயல்படுத்தும் பொழுதும் ஓரளவு பழைய முறைகளைக் கைக்கொள்வதை நாம் எல்லா இடத்திலும் அறிவோம். அவற்றை அறிவது எளிது.

விலக்குவது முக்கியம், உழைத்து சம்பாதிப்பது முதல்நிலை. உயர்வின் அந்தஸ்த்தால் சம்பாதிப்பது அடுத்த நிலை. அறிவின் சிறப்பால் அதிகமாக சம்பாதிப்பது மூன்றாம் நிலை. உழைக்காமல், அந்தஸ்த்தை நம்பாமல் அறிவைப் பயன்படுத்தாமல் அமைதியாக இருப்பதால் ஏராளமான செல்வம் தேடி வருவது ஆன்மீகம். தேடிப் போவது சிறியது. நாடி வருவது பெரியது. வாழ்க்கை, தொழில் உலகமறிந்தது. அது பழைய வாழ்வு. மனவளம், ஆத்ம அமைதி வாழ்வில் வெளிப்படுவது அன்னை வாழ்வு. எந்த டீலர்ஷிப்பிற்கு முதன் மந்திரி பிரதம மந்திரியை நாட வேண்டியிருந்ததோ அதே டீலர்ஷிப் மிகப் பெரிய அளவில் தேடி வருவது அன்பர் அனுபவம். மேல்நாட்டார் சுயமரியாதை, மானம், சத்தியம், நேர்மையுள்ளவர். குளிக்கமாட்டார்கள். வருஷத்தில் ஓரிரு முறை குளிப்பார்கள். இந்தியர்கள் உடலில் தூய்மையுடையவர்கள். இந்தியப் பெண் ருக்கு, இலட்சிய மனப்பான்மை கொண்டவர். திருமணத்திற்கு முதல் நாடி ஓடிப் போய் காஷாயம் வாங்கியவனை மனதில் வரித்து அவனை சந்திக்க முடியும் என 30 வருஷம் காத்திருந்த ருக்கு, 30-ஆம் வருஷம் சந்தித்தாள். அது இந்தியப் பெண்களுக்கேயுரிய இலட்சியமான விஸ்வாசமான பண்பு. மனம் ஏற்றவனை மணாளனாக நினைத்து வழிபடுவது உத்தம குணம். எந்த காலத்திலும், எந்த நாட்டிலும் போற்றப்படுவது. திருமணம் அழியலாம். விஸ்வாசம் அழியாது.

சாஸ்திரி வீட்டில் பிறந்து சம்பிரதாயமாக வளர்ந்து 1940-இல் சென்னைக்குப் படிக்க வந்தவள் லலிதா. அழகி. அனைவரும் போற்றும் பண்பு. அவள் மனம் எவரையும் நாடவில்லை. ராமநாத சாஸ்திரியின் பிள்ளையாய் பிறந்தவன் சந்துரு. அழகன் என்பதால் பெண்கள் விரும்பும் ஆடவன். அவன் மனம் எந்தப் பெண்ணையும் நாடவில்லை. லலிதா அவனை வலிய நாடி வந்த பொழுது அது முறையில்லை என எடுத்துக் கூறும் பொழுது அவள் தூய்மை, உயர்ந்த உத்தம உள்ளத்தின் அடக்கம் அவனைக் கவர்ந்தது. இருவரும் சேர்ந்து வாழ்வதை அறிந்த அவன் தகப்பனார் அவனைத் தேடிவந்து அவளைக் கண்டார். உள்ளம் தூய்மையானது தோற்றம் பவித்திரமானது. பேச்சு வலிமையின் மென்மையைத் தாங்கி வரும் இனிமையுடையது. இப்படிப்பட்ட பெண்ணெனக்கு மருமகளாக வர நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும் என நினைத்தார். நினைத்ததை செயல்படுத்தினார். ஊரையும், உலகையும் மறுத்து செயல்பட்டார். விஸ்வாசம், உறுதி உயர்ந்தது. உயர்வு சிறப்புப் பெறுவது அரிது. உயர்வு பெற்ற சிறப்புக்கு உள்ளத்தின் பலம் உண்டு. ராஜாஜியின் அறிவின் தெளிவு கென்னடி அவருக்கு வழங்கிய 15 நிமிட சந்திப்பை 75 நிமிடமாக்கியது. பெண்ணின் மனிதப் பண்பு தெய்வாம்சமாகி, நல்ல மனிதனை க்ஷணத்தில் ஆட்கொள்வது ஆன்மீகப் பொலிவு. அன்னை ஜீவியம் அதையும் கடந்தது. அப்படிப்பட்ட உயர்வை முதல் நிலையாக்கும் உச்சகட்ட உயர்வு. அந்த உயர்வு செயல்பட்டுப் பலன்தர உடல் உழைப்பு தடை, மனம் வேலை செய்து சிந்திப்பதும் தடை. எந்த சிந்தனையுமின்றி எண்ணத்தைக் கடந்து பெற்ற ஏற்றம் அன்னை வாழ்விற்குரியது. அனைத்து அன்பரும் பெறக் கூடியது. செயலில் பழைய நினைவுகள் அவசரமாக வெளிப்படும், கிராக்கி செய்யத் தோன்றும், தயக்கம் தடையாக வரும். எண்ணம் எதிர்பார்ப்பாக வந்து தடை செய்யும். சமர்ப்பணம் சர்வமும் அர்ப்பணம் செய்வது. சர்வமும் எனில் மனத்தின் உந்துதல்கள் உட்பட பழையது விலகி, புதியது செயல்படுவது அன்னை வாழ்வு அன்பர் வாழ்வாக மாறுவது. தூய்மையானவர் ஆசாரமும் வலிமையும் உண்மையும் உடையது. அது குதிரை சவாரிபோல் அன்னை வாழ்வு காருக்குரிய வேகமுடையது. ஆசாரத்தைவிட அன்னைக்கு ஏராளமான வலிமையுண்டு. குறை ஆசாரத்திலில்லை. நல்ல குணமில்லை என்றால் ஆசாரம் தலைகீழ் வேலை செய்யும். குருக்கள் மக்கள் தூய்மையுடையவர். ஆசாரமானவர். ஆனால் ஆசாரம் தந்தது வறுமை. வறுமையைப் பொறுக்கும் திறமை. க்ஷணத்தில் அன்னை ஸ்பர்சம் இரு பெண்கட்கும் வாழ்வு கொடுத்தது. சூழல் பட்ட இடமெல்லாம் பலன் பெற்றது. தம்பிக்கும் உபநயனமாயிற்று. கதையெனினும் லாட்டரிப் பணத்தைத் தொடமாட்டேன் என்ற சாஸ்திரி ஆசாரத்தின் தூய்மை பெற்றவர். பொய் சொல்பவர், குடிப்பவர், கெட்ட நடத்தையுடைவர் ஆசாரத்திற்குப் புறம்பானவர். நமக்கு ஆசாரம் பிரச்சினையில்லை. பழைய படிப்பு திண்ணைப் பள்ளிக்கூடம் முந்திரிக் கணக்கு அவை குறைவற்ற நிறையுடையவை. இன்று நாம் ஏற்க முடியாது. விவரம் தெரியாமல் கம்ப்யூட்டருக்கு பதிலாக முந்திரிக் கணக்குப் பயில்பவர் நம்மால் பயன் பெற மாட்டார். வேதபாட சாலை புனிதமானது. அதுவும் திண்ணைப் பள்ளிக்கூடமும் இன்று எடுபடா. கல்லூரிப் படிப்பு மட்டுமே எடுபடும். பழைய வாழ்வு திண்ணைப் பள்ளிக்கூடம். அன்னை வாழ்வு கல்லூரிப் படிப்பு.

1930-இல் ஒரு பிரபலமான சிறுகுடும்பம் கடன்பட்டது. முழு சொத்தும் அழியும் நிலையில் காப்பாற்றப்பட்டது. காப்பாற்றியபின், அவரும், அவர் பிள்ளைகளும் கடன் வாங்குவதை நிறுத்தவில்லை. மீண்டும் நெருக்கடி பல ரூபத்தில் பல அளவில் எழுந்தன. அக்குடும்பத்தில் இரண்டு பேரன்கள். இருவரும் அன்பர்கள். ஒருவர் தரிசனம் பெறும் அன்பர். பழைய முறைகளைப் போற்றிப் பேணுபவர். அடுத்தவர் அன்னை முறைகளை அதற்குரிய தூய்மையுடன் பின்பற்றுபவர். இருவர் வாழ்விலும் கடன் பெறும் அவசியமோ, வாய்ப்போ இல்லை. கர்மம் வலியது. ஆனால் அன்னை அதைக் கடந்தவர் என்பதை ஒருவர் அறிவார். அடுத்தவர் அறியார். அன்பர் வாழ்வு சிறப்புறும் நிலையில், அவர்தம் நம்பிக்கையால் அடுத்தவர்

பெற்ற கடனிலிருந்து அவரை மீட்கும் சந்தர்ப்பம் வந்து பலித்த பொழுது, தம் பாட்டனார் பெற்ற கடனின் அம்சங்கள் அங்கு பல ரூபங்களில் எழுவதைக் கண்டார். அவர் சம்பந்தப்பட்ட வியாபாரி தனக்கு 17 ஆண்டு நிலுவை அன்பர் மூலம் வசூலானது என்றார். ஓராண்டு சேவையில் "இந்த கிராமத்தில் 10 ஆண்டாக அனைவரும் வாங்கிய கடன் இந்த ஆண்டு மகசூலால் அடைக்கப்பட்டது" என்று பலரும் பேசினர். பாட்டனார் கடன் பெற்றதைப் போன்ற அளவு அன்பருக்கு சொத்து வந்தது. பிறகு அது பெருகியது. அடுத்த பேரன் அன்னையை வணங்கினாலும் அன்னை முறைகளை ஏற்கவில்லை. சந்தர்ப்பமே இல்லாமல் கடன் எழுந்தது. தொடர்ந்து பெருகியது. பாட்டனார் பெற்ற கடனை சொல்பம் என்று கூறும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்தது. அன்னை அருளால் அவர் படிப்பு, வேலை, திறமை, பிரபலம் இதுவரை அவர் குடும்பத்தில் எவரும் நினைக்க முடியாத அளவிற்கு உயர்ந்தது.

- அருள் அற்புதமானது.
- கண்மூடித்தனமான பிற்போக்கான பழக்கங்களை வலியுறுத்தினால் அழியாது. விஸ்வரூபம் எடுக்கும்.

நெறி பெண்கட்கு மட்டுமல்ல. ஆண்கட்கும் உண்டு. "நீ அடுத்தவன் மனைவி அதனால் நான் உன்னைத் தொட மாட்டேன்" என்ற உறுதியை 1000 மைல் தொடர்ந்த பெண்ணிடம் நிறைவேற்றிய ஆண்மகன் பிறந்த நாடு இது. வட்டிக் கடைக்காரன் பணத்தின் மீது ஆசையுள்ளவன். தன்மீது ஆசைப்படுபவனிடம் பணம் ஆசைப்பட்டு வந்து சேரும், அது பிறருடைய அவலத்தால் சேரும் பணம். அன்னைக்குக் காணிக்கையாய் வரும் பணம் செலவாகும் வழியைக் கண்டால் கொடுத்தவர் சுபாவத்தைப் பிரதிபலிப்பது தெரியும். பேராசிரியர் காணிக்கை புத்தகம் அச்சடிக்கப் பயன்படுகிறது. மிராசுதாரர் காணிக்கை அன்னையின் நிலங்கட்குப் பயன்படுகிறது. இன்ஜினீயர் காணிக்கை கட்டிடம் ரிப்பேர் செய்யப் பயன்படுகிறது. சீட்டாடுபவன் காணிக்கைக் கொடுத்தால், அவனது கெட்ட பழக்கம் போகிறது. அந்தப் பணம் செலவாகும் பொழுது அதில் சீட்டுக் கட்டு ஏதாவது ஒரு ரூபத்தில் சம்மந்தப்படுவதைக் காணலாம்.

- பணத்திற்கு ராசியுண்டு.
- அன்னை ஸ்பர்சம் பட்டபின் அதன் கெட்டராசி நல்ல ராசியாக மாறும்.
- கெட்டதை வற்புறுத்தும் அன்பர் விஷயத்தில் கெட்டது விஸ்வரூபமாகியிருக்கும்.

பாத்திரம் தேய்த்தவர் பணக்காரராகலாம். அவர் அன்பராவது பணக்காரர் ஆவதைவிட சிரமம். பொதுவாக அன்பரானால் நிலைமை உயரும், நம் குறைகளைமீறி பலன் வரும். அது நம் குறைகளை அழிக்காது. அன்பர் வாழ்வில் எந்த உயர்ந்த நிலையை அடைய விரும்பினாலும், அது கற்பனைக்கு எட்டாததானாலும், அதற்கான முறைகளை அறிந்து தெளிவு பெற்று, நிபந்தனைகளை கசப்பின்றி ஏற்றால் பலன் உண்டு. உதாரணமாக சேல்ஸ்மேன் M.L.A. ஆவது, மந்திரியாவது நடப்பதை நாம் காண்கிறோம். அன்னை சூழலில் தன்னையறியாமல் அப்பலன் பெற்றவர் உண்டு. பெற்றதை நீடிப்பது, இழப்பது, பெற்றவரைப் பொருத்தது.

- அன்பர் எந்த நிலையிலிருந்தாலும், எந்த உயர்ந்த நிலையை நியாயமாக விரும்பினாலும், அதற்குரிய முயற்சியை ஏற்க முன்வந்தால், ஏற்கும் குறைகளை அன்னை நியாயப்படி பின்பற்றினால் தவறாது உரிய காலத்தில் பலிக்கும்.

வாழ்வின் சாதனைகட்கு முயற்சி, உழைப்பு, திறமை, கவனம் போன்றவை பல தேவை. நான் அடிக்கடி குறிப்பிடுவது நல்லெண்ணம். பொதுவாக நாம் நல்லெண்ணமுடையவரெனக் கொள்கிறோம். அது நேரம் வரும் பொழுது அந்த உண்மை தெரியும்.

நல்லெண்ணம் மனதில் எழ ஆத்ம
விழிப்பு தேவை.
அது இல்லாமல் நல்லெண்ணம் எழாது.

எலிசபெத் நல்லெண்ணத்தால் ஜேனுக்குப் பெரிய திருமணம் நடந்தது. படிப்பில் S. S. L.C, இன்டர்மீடியட், B. A.-யில் தவறாது தவறியவருக்கு M.A. படிக்கும் வாய்ப்பை நல்லெண்ணம் ஏற்படுத்திக் கொடுத்தது. பேராசிரியரின் எதிர்ப்பு அவருக்குப் பீதியைக் கொடுத்தது. நல்லெண்ணம், அன்பரின் நல்லெண்ணம் கடுமையாக எதிர்த்த பேராசிரியரை இனிமையாக விரும்பும்படி செய்தது. M. A.-இல் சேர்ந்த பிறகு "தனக்குப் படிப்பு கசப்பு, ஒரு பக்கம் படிக்க முடியாது" என்று அவர் கண்டபின் அவருக்கு நல்லெண்ணம் படிக்காமல் அனைத்து விவரங்களையும் அறிந்து, அதற்கான பெரும் பாராட்டையும் பெற்றுக் கொடுத்தது. அவருக்கு

எழுத வாராது. நல்லெண்ணம் எழுதுவதை எளிமையாக்கும் முறையைக் கற்றுக் கொடுத்தது. அதன் பலனைக் கண்ட பின்னும் தொடர்ந்து முயல சோம்பேறியாய் மறுத்தது. பரீட்சையில் எழுத முடியவில்லை. அடுத்த பரீட்சைக்குப் படிக்க ஆரம்பித்தார். நல்லெண்ணம் அவருக்கு பாஸ் "போட்டது". அந்த பாஸ் II Class என அமைந்தது. பெற்றவர் Ph.D. படிக்க அமெரிக்கா சென்றார். நல்லெண்ணத்திற்கு அவர் கொடுத்த கைம்மாறு "நீங்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை அறிந்து மகிழ்ந்தேன். அது ரத்தானது ஏமாற்றம் தந்தது" என்ற பொருள்படும்படி வெளியூரிலிருந்து வந்து சொல்லிவிட்டுப் போனார்.

- நல்லெண்ணம் சாதிக்காததில்லை.
- அதைப் பெறுபவரை நான் பார்த்ததில்லை.

------ ஸ்ரீ கர்மயோகி அவர்கள்

%%%%%%%